புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

விரோதி௵ (1889)
தை௴ ௨௰௧
ஸ்தாபனம்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலுங் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்:	௵ 1-க்கு	ரூ. 5-60
வெளியூர், இந்தியா:	,,	ரூ. 9-40
தொலைவாய்ப்பகுதி:	,,	ரூ. 9-40
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன் முறைக்கு:—	ஒருகலம்	ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5-00
,,	கால்கலம்	ரூ. 3 15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு மேல் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

புத்தகம்—௩௫ } யாழ்ப்பாணம்:—ருத்திரோற்காரி௵ மாசி௴ ௨ (1924 பிப்ரவரி 14) வியாழக்கிழமை. { இலக்கம்—௯௨.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

யாழ்ப்பாணம்
சைவபரிபாலனசபையாராற்
பிரசுரஞ் செய்யப்பெற்ற

புத்தக விளம்பரம்.

	ரூ. ச.
முதற்பாலபாடம்(சித்திரசகிதமானது)	௧௦
இரண்டாம் பாலபாடம் ,,	௧௫
மூன்றாம் பாலபாடம் ,,	௨௦
நான்காம் பாலபாடம்	௩௦
ஐந்தாம் பாலபாடம்	௪௦
ஆறாம் பாலபாடம்	௫௦
கலாமஞ்சரி விளக்கத்துடன்	௭௫
கிருட்டிணன்றூது, உரையுடன்	௮௫
நமச்சிவாயமாலை, உரையுடன்...	௯
ஆத்திசூடி	௩
வெற்றிவேற்கையுரை	௯
வாக்குண்டாமுரை	௯
நல்வழியுரை	௯
நன்னெறியுரை	௯
இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)...	௧௨
இலக்கண வினாவிடை...	௧௦
நிகண்டு ௧௧-வதும் ௧௨-வதும் ...	௨௫
திருவாதவூரடிகள்புராண மூலம் ...	௨௫
திருச்செந்தூர்ப்புராணவுரை	
கிளேஸ்காகிதம்	௧-௨௫
நவ்காகிதம்...	௧-௦௦
கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன்	௧௦
கந்தசஷ்டி கவசம்	௯
சுப்பிரமணியசுவாமி விருத்தம் ...	௯
ஆறுமுகசுவாமி விருத்தம்... ...	௯
பிள்ளையார்கதை	௧௨
கதிரைமலைப் பேரின்பக்காதல் ...	௧௨
பிரபஞ்சப் பெருவழக்கு	௪௦
இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்?	௧௦
சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு)	௬
குமணசரித்திரம் ,,	௬
பஞ்சரத்தினத் திருப்புகழ்	௯
சோமவாரவிரதமான்மியம்...	௧௦
கந்தவிரதமான்மியம்	௧௦
சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு)	௧௫
மறைசையந்தாதி	௨௦

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

முற்பணமனுப்புவோர் முத்திரையனுப்பாது போஸ்றல் ஆடரேனும் மனி ஆடரேனும் முத்திரைச்செலவுஞ் சேர்த்து வண்ணார் பண்ணைத் தபாலாபீசிற் பெறக்கூடியதாக அனுப்புதல்வேண்டும். இருபத்தைந்து ரூபாவுக்குக் குறைந்த ஆடர்கள் எம்மால் வீ. பீ. யில் அனுப்பப்படமாட்டா.

சபையார் அச்சிட்ட புத்தகங்களன்றி ஏனைய புத்தகங்கள் இங்கு விலைக்குக் கிடையா.

சபையார் அச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், பிறிற்றனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தகசாலை முதலிய இடங்களிலும், பருத்தித்துறை S. P. சுல்த்தான் சிக்கந்தரிடத்திலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப்பிள்ளை, வீ. எம். கந்தசாமி இவர்களிடமும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

[ESTABLISHED 1909].

MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall

PORTONOVO (*SouthArcotDistrict*).

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக சத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாபீஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகை தாதுக்களின் பலஹீனம், தந்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை; நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பலகம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சாப்படுத்தி, புதியகேள்யுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனானுகூல நன்மைக்காகவே இதனை மிகவும் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றேம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் [illegible] ரூபா 4—0—0.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்செலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரையமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். வெளியூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் சிருதம் அதாவது ஷை குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ருஜிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ருஜித்தும் இனுமடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினாலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19.)

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

நாணயமான சரக்குகள்! சகாய விலை.

காசி பட்டுச் சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், உல்லன் போர்வைகள் முதலியன மிகவும் சகாயமான விலைக்கு அனுப்பப்படும்.

தமயந்தி மின்னல் கோடிச் சேலைகள். எல்லா லேட் கலர்களிலும் கிடைக்கும்.

16 முழம் நீளம் 2½ முழம் அகலம் உடலில்பட்டுப்பூவேலைகளுடன் ஜரிகைக் கட்டங்கள் வேலை செய்தது. சேலை 1க்கு ரூ. 45 முதல் ரூ 100 வரை.

கத்தரிப்பூ சேலைகள்.

16 முழம் நீளம் 2½ முழம் அகலமுடையது. விளிம்பில் 1½, 2 இஞ்சு ஜரிகையினால் கொடி செடி வேலையுடன் முந்தியில் 5 அல்லது 6 இஞ்சு உயர்ந்த ஜரிகையினால் பூவேலைகள் செய்யப்பட்டது. சேலை 1-க்கு ரூ. 80 முதல் ரூ. 150 வரை.

"கேட்லாக்" இனும். உடனே எழுதுங்கள்.

பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி.

Silk Pitamber Coy.,
Pitamber Buildings,
BENARES CITY.

(Y. 27.)

காசிதாடா சேலை.

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லிலெப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலைபில கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

வெள்ளிக்கெண்டைச்சால்வை.

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினால் செய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
(Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற
மருந்துகள்.

இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில்
கொடுக்கும்!!

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

புஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரிக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4-0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ்வேறு.

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மேன மேலும் பெருகும், தொத்து நோய், அவமிருத்து தோஷம், பேசவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினங்கு, சிங்கப்பூர், நேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
பழனி. S. I.
(Q. 40)

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய

அறைக்கீரைவிதைத்தைலம்.

V. SAWMY AYENGAR'S
TRADE MARK

இதன் குணம்:

பித்த மேகதிரானது சிரசிற்கேறி அதனால் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினால் சீழ்வடிதல், காதுஇரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் அநுகூலப்படுத்தும். மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினால் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்துகொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறாது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

கும்பகோணம்
வி. எஸ். கோமளத்தம்மாள்,
மானியுபாக்சரர்,
8. பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.

(Y 26.)

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோற்காரி௵
மாசி௴ 2௳ வியாழக்கிழமை.

மிஸ்டர் J.M.ஹென்ஸ்மன் கௌரவஸ்ரீ துரைசுவாமியின்மீது கூறும் அபவாதம். ௧.

சிலவாரங்கட்கு முன்னர்க்கூடிய இலங்கைச் சட்டநிரூபணசபைக் கூட்டத்திலே அரசினர், குற்றவாளிகளைச் சீர்ப்படுத்துங் கடமையை இரட்சணிய சேனையின் பொறுப்பில் ஒப்பித்து, அதன்பொருட்டு ௬0,000 ரூபாவையும் அரசாங்க வருவாயிலிருந்து அச்சபையினிடத்திற்குக் கொடுத்தல்வேண்டுமெனநிர்ணயஞ்செய்யமுயன்றபோது, நமது வடமாகாணப் பிரதிநிதியாகிய கௌரவஸ்ரீ துரைசுவாமியவர்கள் சைவர், கிறீஸ்தவர், பௌத்தர், இஸ்லாமானவர் என்னும் பலபேதப்பட்டசமயத்தவர்கள் கொடுக்கும் வரிப்பணத்தை அரசினர் பெற்று கிறீஸ்துசமயத்தைவிருத்திபண்ணும் நோக்கங்கொண்டு உழைக்கும் இரட்சணிய சேனையிடங் கொடுத்தல் முறையன்றெனப் பல தக்க நியாயங்கள் காட்டி வாதித்தனர். தென்மாகாணப் பிரதிநிதியாகிய கௌரவமிஸ்டர் கன்னங்காராவும் கௌரவஸ்ரீ துரைசுவாமியவர்கள் கூற்றை அநுவதித்துப் பேசினர். தேசாதிபதியவர்களும் அக்கூட்டத்திற் சமுகமாயிருந்த சகல அங்கத்தவர்களும் ஸ்ரீ துரைசுவாமி கூறியது முறையாகுமென்று அவர்கூற்றை அங்கீகரித்து அந்த விஷயத்தை அப்பொழுது எடுத்து ஆளாது விடுத்துத் தவணையிட்டனர். ஸ்ரீ துரைசுவாமியவர்கள் எடுத்துக் காட்டிய நியாயம் தக்கதாமென்பதை அக்கூட்டத்திலிருந்த சைவ, பௌத்த, இஸ்லாமான சமயங்களை அநுசரிக்கும் அங்கத்தவர்கள் மாத்திரம் அங்கீகரித்தமையோடு அமையாது, அங்குச் சமுகமாயிருந்த கிறீஸ்த சமய அங்கத்தவர்களும் அதனை அங்கீகரித்துக்கொண்டனர். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெறும் கிறீஸ்தவ பத்திரிகைகளும் ஸ்ரீ துரைசுவாமி கூறியது தக்கதென்பது பற்றிப்போலும், அவர்கூற்றைக் கண்டித்தில. நீதியான விஷயத்தை அறிவுடையோர் சரியெனக் கொள்வதே உலகவியல்பாகும்.

இங்ஙனமெல்லாமிருக்க, மிஸ்டர் J. M. ஹென்ஸ்மன் என்பவருக்கு மாத்திரம் துரைசுவாமியவர்களின் பேச்சு ஆச்சரியத்தை விளைத்துவிட்டமையின், அவர் இந்த பிவ்வரி௴ ௬-ந் தேதி வெளிவந்த உதயதாரகைப் பத்திரிகையின் ஆங்கில பாகத்தில் ஸ்ரீ துரைசுவாமியவர்களை இவ்விஷயமாகப் பெரிதுங் கண்டித்து எழுதியிருக்கின்றார். மிஸ்டர் ஹென்ஸ்மன் ஸ்ரீ துரைசுவாமிமீது கற்பிக்கும் அபவாதம் எவையென்பதையும் அவை முறையற்றனவென்பதையும் கீழே காட்டுகின்றேம்.

“குற்றவாளிகளைத் திருத்தும் நோக்கமாக அரசினர் இரட்சணியசைநியத்திற்கு ௬0,000 ரூபா கொடுக்க நிர்ணயஞ்செய்தபோது ஸ்ரீ துரைசுவாமியவர்கள் அதைத் தடுத்தமை பெரும் ஆச்சரியமாகும், தேசாதிபதியவர்களும் அவர்கூற்றை அங்கீகரித்தமை இன்னும் பேராச்சரியமாகும்; இப்படிப்பட்ட விஷயங்களில் இரட்சணிய சேனை தஞ் சமயத்தைப் பரப்ப முயல்வதில்லையென்பதை ஸ்ரீ துரைசுவாமியவர்கள் அறிந்திராவிட்டாலும் தேசாதிபதி நிச்சயமாக அறிந்திருத்தல்வேண்டும். குற்றவாளிகளைத் திருத்துவதில், இரட்சணிய சைநியம் உலகத்திலே ஒப்பாரும் மிக்காருமற்றது” என்னுங் கருத்தமைய மிஸ்டர் ஹென்ஸ்மன் கூறிப் பேராச்சரியப்படுகின்றார்.

இரட்சணிய சைநியம் இங்கு வந்து வேலை செய்யும் நோக்கமென்ன? இரட்சணிய சைநியம் என்ற வாக்கியத்தின் அர்த்த மென்ன? அஞ்ஞானிகளெனத் தாம் எண்ணுகின்றவர்களைத் தஞ்சமயத்திற் சேர்த்து இரட்சிக்கும் சைநியமே இரட்சணிய சைநியமாகும். இந்தச் சைநியம் குறித்த குற்றவாளிகள் விஷயத்தில் மாத்திரம் மிஸ்டர் ஹென்ஸ்மன் சொல்லுகிறபடி, தங்கள் சமயத்தைப் போதித்து அவர்களையும் இரட்சிக்காவிட்டால், இச்சைநியம் தம் கடமையிலே திறம்பியதாகிவிடுமே. கப்பிளைக் கலத்தில் இட்டு வைத்தாலும் அதனைத் தன் காலாற் கிளறிவிட்டு உண்பதே கோழியின் இயல்பாயிருத்தல் போல, தம் உடல் பொருள் ஆவி மூன்றினையும் வாழ்நாள் முழுவதும், அந்நிய சமயத்திற் சென்றவர்களை அச்சமயங்களினின்றும் இரட்சித்துத் தஞ் சமயத்திற் சேர்த்தற்கு அர்ப்பணஞ் செய்த இரட்சணிய சைநியம், குறித்த குற்றவாளிகளைத் திருத்தும் விஷயத்தில் மாத்திரம் அரசினரிடம் தாம் பெறும் அறுபதினாயிரம் ரூபாவிற்காகத் தங்கள் மார்க்கத்தை அக்குற்றவாளிகளுக்குப் போதித்து அவர்களை இரட்சிக்கத் தலைப்படார்களென்று மிஸ்டர் ஹென்ஸ்மன் சொன்னாலும் அறிவுடையோர் எவராவது அவர் கூற்றை அங்கீகரிப்பரா? அறிவிற் குறைந்தவ னொருவனை அறிவுள்ளவன் என்றிருப்பவன் திருத்த முயலும்போது, அந்த அறிவுள்ளவன் சரியானவை என்று தான் நம்பியவற்றையே அவனுக்கும் போதிக்க முயல்வன். அதுபோலவே குற்றவாளிகளை இரட்சணிய சைநியத்திடம் ஒப்பித்தால், அவர்கள் நெடுங்காலமாகச் சரியெனத் தாங் கொண்டுள்ள தம்மார்க்க கொள்கைகளைத்தானே அக்குற்றவாளிகளுக்கும் எடுத்துப்போதித்து அவர்களைத் தம்வழிப்படுத்த முயலுவர்.

மிஸ்டர் ஹென்ஸ்மன் சொல்லுகிறபடி, இந்தக் குற்றவாளிகள் விஷயத்திலே மாத்திரம் இரட்சணிய சைநியம் தஞ்சமயத்தைப் போதியாது இக்குற்றவாளிகளைச் சீர்ப்படுத்திவிடுமென்று வைத்துக்கொள்வோம். ஆனால், வரி கொடுக்கிற சைவர் பௌத்தர் இஸ்லாமானவர் என்னும் மற்றுஞ் சமயத்தவர்கட்கு தாங்கொடுத்த வரிப்பணத்தில் அறுபதினாயிரம் ரூபாவை, தங்கள் சமயங்கட்கு மாறாகக் கிறீஸ்த மார்க்கத்தை மாத்திரம் பரப்பவந்த இரட்சணிய சைநியத்திடம் கொடுத்தல் இஷ்டமில்லாவிட்டால் தேசாதிபதி என் செய்வது, அச்சனங்களின் பிரதிநிதியாகிய கௌரவஸ்ரீ துரைசுவாமியென்செய்வது, மிஸ்டர் ஹென்ஸ்மன் ஆச்சரியப்பட்டு என்செய்வது? பல சமயத்தவர் கொடுக்கும் வரிப்பணத்தில் ஒருபாகத்தை, அவர்களுடைய பூரண சம்மதமின்றி ஒரு சமயத்தைப் போதிப்பவர்களிடத்தில் எக்காரணம்பற்றியாவது கொடுத்தற்கு அரசினருக்காயினும் வேறு எவருக்காயினும் அதிகாரமில்லை யென்பதை மிஸ்டர் ஹென்ஸ்மன் நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

மிஸ்டர் ஹென்ஸ்மன், கௌரவஸ்ரீ துரைசுவாமி மீதும் மற்றுஞ் சில சனத்தலைவர் மீதும் சுமத்தும் அபவாதம் முறையற்றதாகுமென்பதை இப்பத்திரிகையின் அடுத்த பிரசுரத்திலும் எடுத்துக் காட்டுவேம்.

நாவல் வெள்ளம்.

(குமரன்.)

இதுகாலை நமது தமிழ் நாட்டில் வெளிவந்து உலாவும் நாவல்கள் எண்ணில்லாதன. நாவல்கள் மல்கி வருவதைப் போல் நாவல் ஆசிரியர்களும் ஆயிரக்கணக்காகப் பெருகி வருகின்றார்கள். நாவல்களை விரும்பிப் படிப்போரும் லக்ஷக்கணக்காக இருக்கின்றார்கள். ஆடவர், பெண்டிர், மாணவர் அனைவரும் நாவல் வெள்ளத்தில் திளைக்க நனி விரும்புகின்றார்கள். புத்தகக் கடைகளிலும் நாவல் வெள்ளம் பெருகிக்கொண்டே யிருக்கின்றது. அவ்வெள்ளம் புகாத வீடுகள் அரிதாகவே இருக்கின்றன. ஆகவே இந்நாளில் நாவல் வெள்ளம் மக்கள் பலரைக் கொள்ளைகொண்டு வருதல் இனிது புலப்படும். இவ்வெள்ளம் இவ்வாறு பெருகி வருவதன் காரணம் என்னை? கதைகளெல்லாம் பெண்மக்கள் வடிவ நலன்களைப் பெரிதும் அளவு கடந்து வருணித்துக் காமக்கிளர்ச்சியை எழுப்புவனவாக இருத்தலே முதற் பெருங் காரணமாகும். இரண்டாவது காரணம் கல்விப் பெருக்கமின்மையேயாம்

ஒவ்வொரு நாவலும் ஒவ்வொரு பெண்மணியின் பெயராலேயே எழுதப்படுகின்றது, பெண்மணிகளின் பெயர் புனையப்பெற்ற நாவல்களே பெரிதும் விலைப்போகின்றன. நவில்தொறும் நவில்தொறும் நுண்ணறிவுடையார்க்கு நூல் நயம் இன்பமூட்டுவதைப்போல், வாசிக்குந்தொறும் வாசிக்குந்தொறும் நாவல் நசையுடையார்க்கு நாவல்கள் சிறுமையின்பத்தினை நனி நல்கிக் களிப்பூட்டுகின்றன என்பது மிகையாகாது. நாவல் வாசிப்போர்க்குப் புதுமையிலே புத்தி செல்லுதலால் அன்னார் நவீன நாகரீக வெள்ளத்தால் விழுங்கப்பட்டு வருதலை நாம் நன்கு காணலாம். நாவல் வாசிப்போர் நாவலாசிரியர்களை ஆதரிப்பதைப்போல் வேறு எவரும் எத்துறையையும் ஆதரியார். அவர்கள் நாவல்கள் வெளிப்போந்த மறுநாளே ஒவ்வொன்றையும் விலைக்கு வாங்கி வாங்கிக் குவிக்கின்றார்கள். எவ்வளவு அதிக விலையாக இருப்பினும் கதைமட்டும் காமக்கிளர்ச்சியை எழுப்புந் திறத்ததாயிருந்தால் அந்நாவல்கள் மிகச் சூடாக விலைப்போகின்றன. ஆகவே இத்தகைய கதைகளையெழுதுவோர் எல்லையின்றிப் பெருகிவருகின்றார்கள். இனி இத்தீய நாவல்களை வெளியிடுவோரிற் பலர் இத்தொழிலையே வயிற்றுப் பிழைப்பிற்குரிய முக்கிய ஆதாரமாக வைத்துக்கொண்டு ஆனந்தமாக வாழுகின்றார்கள். அவர்களைப் பார்த்து ஆங்கிலக் கலாசாலைகளினின்றும் வெளிவரும் தமிழ்ச் சுவை யறியாத் தம்பங்களாகிய மாணவர்கள் பலர் வயிற்றுப் பிழைப்புக்காக நாவல்கள் எழுதி வயிறு வளர்ப்பான் புகுகின்றார்கள். நாவல்கள் சூடாக விலைப்போகப்போக அத்தொழிலையே மேற்கொண்டுவிடுகின்றார்கள். எனவே வறுமையாம் சிறுமைவாட்டுதலால் ஏழை மாணவர் பலர் வயிற்றுப்பிழைப்பு ஒன்றையே முக்கியமாகக்கொண்டு இத்துறையில் இறங்குகின்றார்கள். மேற்றிசை நாவலாசிரியர்களுள் காமக்கிளர்ச்சியினை எழுப்புவதிற் கைதேர்ந்தவராகிய ரெய்னால்ட்ச் (Reynolds) எழுதிய நாவல்களை மொழி பெயர்த்துப் பெயர்களை மட்டும் மாற்றிவிட்டுப் பிரசுரித்து விடுகின்றார்கள். பல நாவல்களில் பாத்திரங்களின் பெயர்கள் மட்டும் தமிழ்ப் பெயராகவும், ஏனைய நடையுடை பாவனை யனைத்தும் மேற்றிசை நாகரிகமாகவே இருக்கின்றன. எனவே இந் நாவல்வெள்ளம் இம்மேற்றிசை நாகரிகக் குப்பைகளை நகரங்களின் வாயிலாக வாரிக்கொண்டு வந்து புனிதமான கிராமங்களுட் புகுந்து இளைஞர் பலரைக் கொள்ளை கொண்டுபோகின்றது. இவ்வெள்ளத்தைத் தடுக்க வேண்டுவதறிஞர் கடனாகும். இதனால் நான் உண்மைக் காதற் கதைகளையும், நாவல் முறையில் (Model) இனிய கதைகளை எழுதுதலையும் வெறுக்கின்றேனென்று ஒருவரும் எண்ணுதலாகாது. இதுகாறும் நான் நவின்று வந்த நாவல் வெள்ளம் அனைத்தும், “காட்டுத் தீபோல காமக்கிளர்ச்சியை எழுப்பி இன்னல் விளைவிப்பனவற்றையே” என்பதை எல்லோரும் இனிது உணருதல் வேண்டும். ஏனெனில் நாவல்களில் நல்ல நாவல்களும் சிலவுண்டு. நல்ல ஆசிரியர்களும் சிலருளர். அந்நாவல்களையும் அவ்வாசிரியர்களையும் நான் பெரிதும் போற்றுகின்றேன். ஆனால் தீயநாவல்களையும் அவைகளின் ஆசிரியன்மாரையும் நான் பெரிதும் வெறுக்கின்றேன். அவ்வாசிரியன்மார் இவைகளை எழுதி வெளியிட்டு நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்வைப் பாழ்படுத்தித் தாம் வயிறு வளர்ப்பதைக்காட்டிலும் இரந்துண்டல் நலமெனக் கூறுகின்றேன். இனிப் படிப்போரை நோக்கிச் சில உரைகள் பகருகிறேன். அன்பர்களே! உங்கள் வாழ்நாளில் ஒவ்வொரு நிமிஷமும் மிக அருமையானது. ஆகவே, புண்ணிய நூலல்லாத தீய நாவல் வெள்ளத்தில் அழுந்தி உங்கள் காலத்தை வீணாக்காதீர்கள். காலத்தைப் பொன்போற் போற்றுங்கள்! போற்றுங்கள்!! புண்ணிய நூல்களைப் படியுங்கள். தீய நாவல்களைத் தீயினுக்கிரையாக்குங்கள்! தீந்தமிழ்ப்புலவர்களே! இந்நாவல் வெள்ளத்தைத் தடுத்தற்கு நாம் எத்தகைய அணை கோலுதல் வேண்டும்? முள்ளை முள்ளாற் களைந்தெறிவதுபோல், இத் தீயநாவல் வெள்ளத்தை நல்ல நாவல்களை மிகுதியாக வெளியிட்டே தடுத்தல் வேண்டும். ஆங்கிலமுந் தமிழும் பாங்குடன்கற்ற தமிழ்ஆசிரியர்கள் நல்லநாவல்களை எழுதி வெளியிடல்வேண்டும். ஆகவே நாவல்களெழுதுதல் பாமரர் கரத்திலிருந்து பண்டிதர் கரத்துக்கு மாறுதல் வேண்டும். “தீய நாவல்களை வாசித்தல் கூடாது” என்று பிள்ளைகளைப் பெற்றோரும், மனைவியை நாயகனும், மாணவரை ஆசிரியர்களும் அழுத்தமாகக் கண்டிக்க வேண்டும்.

உலகம் பலவிதம்.

“எப்படியும் முருகேசுவுக்கு எங்கள் மகளை விவாகஞ்செய்து கொடுக்கவேண்டும். நீங்கள் இன்னமும் இந்த விஷயத்தில் பேசாதிருந்தால்போம்புத்தியென்ன? இன்றைக்கும் இரண்டு பகுதியார் முருகேசு வீட்டுக்குச் சம்பந்த விஷயமாக வந்து போகிறார்கள். முருகேசுவோ நல்ல அதிகாரமுள்ள உத்தியோகத்திலிருக்கிறான். இன்னமும் அவனுடைய உத்தியோகம் உயருமென்று பேசிக்கொள்ளுகிறார்கள். தங்கச்சிக்கும் அது நான் பிரியம்போலத் தெரிகிறது, இன்றைக்கே தீர்மானஞ்செய்யவேண்டும்” என்றதுகேட்ட புருஷன் “பெண்ணே, உன் பேதைமையை என்னிடம் காட்டாதே, உத்தியோகமென்பது ஒருகாலத்தில் மரியாதையாக இருந்தது உண்மையே. இப்பொழுது ஒருவனுடைய சந்ததியாகிய மாத்தைத் தறிப்பதற்கு உத்தியோகமே கோடாலியாகவிருக்கிறது. அன்றைக்குச் சந்தியில் நடந்த கலகமும், மிதித்த இடத்தில் புல்லும் சாகாத சின்னத்தம்பி என்ற அப்பிராணியின் வேலை தள்ளுப்பட்டதும், மடத்தடியில் முத்துப்பிள்ளையும் அவளுடைய 3 குமரும் குடியெழும்பித் தெருவழியே திரியவேண்டிவந்ததும் அந்தப் படுபாவி முருகேசனாலல்லவோ? இன்னுமெத்தனை குடியைக் கெடுத்தானோ ஆருக்குத் தெரியும், தேவர்கள் செய்த அக்கிரமத்துக்காகச் சூரன் பிறந்ததுபோல இந்த ஊரவர்கள் செய்த அக்கிரமத்துக்காக முருகேசன் பிறந்திருக்கிறான். ஏதோ அற்பசொற்ப புண்ணியததினாற் கொஞ்ச அதிகாரமும் அஞ்சாறு சல்லியும் வைத்திருக்கிறான். இப்பவே அவனுடைய சங்கதிகள் பாரதமாய் வந்துவிட்டன. உன்னுடைய எண்ணப்படியும் முடிந்துவிட்டால் பெரிய இராமாயணமாய் வந்துவிடும்” எனக் கடுகடுத்துக் கூறினர்.

* *

இதைக் கேட்ட மனைவி பெருமூச்சுவிட்டு ‘வாறதுகளையெல்லாம் தட்டித் தட்டிவிட்டுப்போட்டு கடைசியாய் விழுகிறது பாழ்க்கிணற்றிலேதானே. முருகேசு எங்களுக்கு மருமகனானால் எங்களுக்கு என்ன குறை இந்த ஊரிலுள்ளவர்களெல்லாரும் முருகேசுவைக் கண்டவுடன் அஞ்சிப் பதுங்கி ஒதுங்கி ஒருபக்கமாக ஓடுகிறார்களே; அதுமாத்திரம் போதாதோ” என்று புறுபுறுக்கத் தொடங்கிவிட்டாள். புருஷனுக்கு அதிக கோபம் வந்தது. “அடி சீதேவி, உன்னுடைய கறகறப்பும்புறுபுறுப்பும் ஒய்ந்தால்தான் வீடு விடியும்; உன்னைப்படைத்த கடவுள் பின்னும் அவசியமில்லாமல் யமனை எதற்காகப் படைத்தார்? ஒரு மனுஷனைக் கண்டவர்கள் அஞ்சிப் பதுங்கி ஒதுங்கி ஒருபக்கமாக ஓடுகிறார்களென்று பெருமையாய்ப் பேசுகிறாய். காட்டிலுள்ள புலி கரடி சிங்கம் முதலிய மிருகங்களைக் காண்பவர்களும் அப்படித்தானே ஓடுகிறார்கள். அப்ப முருகேசனும் ஒரு துஷ்ட மிருகந்தான் என்பதை நீயேன் அறியாமற் போய்விட்டாய். பெண்கள் அறிவில்லாதவர்கள் என்பது உண்மைதான். ஆனால் உன்னைப்போல் உணர்ச்சியில்லாத ஒருஜென்மத்தைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை” என்று கண்டிக்கத் தொடங்கினர்.

* *

‘நானென்ன பிள்ளையைக் கெடுக்க வேண்டுமென்று இப்படியெல்லாஞ் சொல்லுகிறேன்; ஐயோ! நான்தான் இனி வேறென்ன செய்ய?” என்று கண்ணீர் வடிக்கத் தொடங்கினள். அப்பொழுது புருஷன் மனைவியினுடைய அறியாமைக்கிரங்கி “அடிபைத்தியமே! கிட்டவா; கொஞ்சம் படபடவாமல் நான் சொல்வதைக் கேள்; அந்தவிதமான அதிகாரச் செருக்கும், பணச் செருக்கும், அழிவுக்குக்காரணமாகிய பெருமையுமுடைய சம்பந்தத்திற்கு நான் ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன். பணத்தாலும் அதிகாரத்தாலும் செருக்குப்பிடித்து நானென்று நிமிர்ந்த எத்தனைபேர் வீரவான்களை நான் என்னுடைய இந்தச் சின்னக் கண்ணினால் கண்டுவிட்டேன். அவர்களுடைய சந்ததியும் நாசமாய், அவர்கள் இருந்த இடமும் தெரியாமற்போய்விட்டன. நெடுங்காலம் பிள்ளையில்லாத கவலையினால் நான் கைபெடுத்த கோயில்களும், பிடித்த விரதங்களும், ஆடின தீர்த்தங்களும் உனக்குத் தெரியாதா? அவ்வளவு தவஞ் செய்து பெற்ற குழந்தையை நீ ஏன் பாழ்ங்கிணற்றில் விழுத்தப்பார்க்கிறாய்? விட்டிற்பூச்சி வெளிச்சத்தைக் கண்டு ஓடி அதில் விழுந்திறப்பதுபோல நீயும் பளபளப்பிலும் சளசளப்பிலும், கிலுகிலுப்பிலும் கொலுகொலுப்பிலும் எடுபட்டு ஒரேயொரு குழந்தைவாயில் மண்போடப்பார்க்கிறாய்; நாளைக்கு வேறும் விளையுமென்று பார்க்கிற தன்மை உனக்குக் கொஞ்சமுமில்லை. குழந்தை இலட்சுமியினுடைய சடங்கைப்பற்றி நானும் ஒவ்வொரு நாளும் யோசித்துக் கொண்டுதா னிருக்கிறேன். எங்கள் புரோகிதர் ஜெகானந்தையரிடமும் சொல்லியிருக்கிறேன். எப்படியும் வருகிற சித்திரையில் சடங்கு செய்துவைப்பது திண்ணம். அதுவரையும் உன்னுடைய பேய்ப்புத்தியைக் காட்டாமல் கொஞ்சம் ஒதுக்க பதுக்கமாய் நடந்துகொள். இதற்கிடையில் அவசியமில்லாமல் வாயை வளர்த்துக்கொள்ளாதே” என்று புத்தி புகட்டி ஒருவாறு மனைவியைச் சாந்திப்படுத்திவிட்டார்.

சமாசாரம்.

யாழ்ப்பாணம் சுப்பிறீங் கோட்டு விசாரணை:—இலங்கை சிறேஷ்டநீதிபதி சேர். அன்ரன்பேட்ரும் அவர்கள் இந்த பிப்ரவரி௴ 11௳ திங்கட்கிழமை தொடக்கமாக இங்கு விசாரணைநடத்தி வருகின்றார். முதலாவதாக மட்டுவிலில் விசுவர் சின்னையா என்பவர் கனகர் என்னும் ஒருவருக்கு கொடுக்கவேண்டிய கடனுக்காக ரூபா 700 பெறுமதியான கள்ளநாணய நோட்டுக்களைக் கொடுத்தாரென்றகுற்றம் சாட்டப்பட்டவழக்கு விசாரணை செய்யப்பட்டு எதிரிக்கு ஆறுவருடக்கடூழியமறியல் விதிக்கப்பட்டது. இரண்டாவதாக ஆனைக்

கோட்டை சதிரேசு என்னும் ஒருவனை சாவகச்சேரியில் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டவழக்கு விசாரணை செய்யப்படுகிறது. இந்தவழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டோர் அறுவரில் ஒருவர் விளக்கமறியலிலிருக்கும்பொழுது இறந்துவிட எஞ்சிய ஐவரும் விசாரணை செய்யப்படுகின்றார்கள்.

பிறண்டியும் முத்துப்பிள்ளையும்:—காரைதீவில் முத்துப்பிள்ளை என்னும் ஒருபெண் கள்ளமாக பிறண்டி விற்றாளென ஊர்காவற்றுறை மதுபரிபாலனப் பகுதிப் பரிசோதகரால் குற்றம் சாட்டப்பட்டாள். ஷை பரிசோதகர் இப்பெண் பிறண்டிவிற்பதை அறிந்து சென்று ஆறுமாதகாலமாகப் பிடிக்க முயன்று இம்முறை தான் சித்தியடைந்தேனென நீதிபதியிடம் கூறினர். அப் பெண்வீட்டில் அகப்பட்ட 57 வெறும் (பிறண்டிப்)போத்தல்களையும் ஒரு பிறண்டிப்போத்தலையும் அளவு கோப்பைகளையும் நீதிஸ்தலத்தில் ஒப்புவித்தனர். அப்பெண் குற்றவாளியாகக் காணப்பட்டு 300 ரூபா அபராதம் அல்லது ஆறு கிழமை கடூரமறியல் விதிக்கப் பட்டாள்.

அமெரிக்கதேசசஞ்சாரிகளின் வருகை:—1500 அமெரிக்க விநோதப் பிரயாணிகளைக் கொண்ட ஒரு கப்பல் இந்த பிப்ரவரி௴ 15௳ கொழும்புக்கு வருமென அறியலானோம்.

மகாத்மாகாந்தியின்வருகை:—மகாத்மாகாந்தி பூரணசௌக்கியம் அடைந்தவுடன் இலங்கையைத் தரிசிப்பாரென்று இந்தியச் சனத்தலைவரில் ஒருவராகிய மௌலானா சௌகத் அலி என்பவர் ஒரு தந்திச்சமாசாரம் அனுப்பியிருக்கிறார்.

மாறுகாட்டியமாது:—நாவலப்பிட்டியிலுள்ள சுகாதாரப்பகுதிப் பரிசோதகராகிய மிஸ்றர் ரெனிக்கோனென்பவர் ஒரு சிங்களவனுடைய வீட்டுக்கொல்லையைப் பரிசோதிக்குந் தருணத்தில் அச்சிங்களவனாற்சருவப்பட்டார் பரிசோதகர் தெருவிற்சென்று அங்கு சாட்சியாக நின்ற இருவருடைய பெயரைக்கேட்டு எழுதும்பொழுது அச்சிங்களவனுடைய மனைவி கோபாவேசங்கொண்டு கையிலோர் விளக்குமாற்றை எடுத்து மேலே உயர்த்திக்காட்டி அம்மாற்றினால் ஷை பரிசோதகரை அடிப்பேனெனப் பயமுறுத்தினள். இருவர்மீதும் வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது.

நூல்களைப்பற்றிய குறிப்பு.

இளைஞர்கணிதம் (நான்காம்புத்தகம்)—இக்கணிதம் சாவகச்சேரி இந்து ஆங்கில வித்தியாசாலை ஆசிரியர்களுள் ஒருவராகிய ஸ்ரீ. மா. பீதாம்பரம் பிள்ளையால் இயற்றப்பெற்றது. இது மேற்படி ஆசிரியரியற்றிய கணித கலாநிதி நூற்றொடையில் 4ம் கலையாகும். நான்காந்தரத்துப் பயிலும் மாணவர்கட்கு உரியனவென வித்தியாபகுதியார் விதித்த பிரமாணத்துக்கியைய கணிதாப்பியாசங்கள் பல மிக விளக்கமாகவும் நுட்பமாகவும் கணிதவிளக்கப் படங்களுடனும் வகுக்கப்பட்டுள்ளன. அப்பியாசங்கள் சிறுவரின் புத்தியை விருத்திபண்ணும் பான்மையினவாய் தெளிவான செந்தமிழில் எழுதப்பட்டுள்ளன. இவ்வாசிரியர் எழுதிய ஏனைய கணிதங்கள்போல் இந்நூலும் குறித்த வகுப்பிற்குப் பெரிதும் பயன்படுமென்பதே எமது அபிப்பிராயம். பிரதியொன்றன் விலை ஜீ சதம். 40. எமக்குதவிய பிரதியைஉவந்தேற்றோம்.

கொங்குவேளாளமித்திரன்:—இது இந்தியாவிலுள்ள திருச்செங்கோடு என்னும் நகரிலிருந்து வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு புதிய தமிழ்ப் பத்திரிகையாகும். இதன் முதன்மலரின் முதலிதழ் வரப்பெற்றேம். இதன்கண் பல வியாசங்களும் சமாசாரங்களுங் காணப்படுகின்றன. இதன் வருடக் கிரயம் வெளிநாட்டிற்கு ரூபா 6. இப்பத்திரிகையின் அபிவிருத்தியை அபேட்சிக்கின்றேம். பத்திரிகையை நன்றியறிதலுடன் ஏற்றேம்.

மகாத்மா பிரதிமைப்படம்:—பனாறிஸ் முத்தையா கம்பெனியார் இலட்சுமியென்னும் அரிய பத்திரிகையின் அனுபந்தமாக வெளியிட்ட மகாத்மாவின் அழகிய திருவுருவப் படங்கள் வரப்பெற்றேம். அவற்றை மனமகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டேம்.

தேகவியோகம்.

இணுவிலிற் சிறந்த தமிழ் வித்துவானாக விளங்கிய அம்பிகைபாக உபாத்தியாயரின் புத்திரியும், கொக்குவில் இந்து ஆங்கில வித்தியாசாலைத் தமிழ்ப் போதகாசிரியர் ஸ்ரீ சின்னத்தம்பிப்பிள்ளையின் மனைவியும், இந்துக்கல்லூரி ஆசிரியருளொருவராகிய ஸ்ரீ அ. க. இளையதம்பி அவர்களின் சகோதரியும், உரும்பராய் இந்து ஆங்கில வித்தியாசாலை ஆசிரியர் ஸ்ரீ ஆறுமுகதாஸ் அவர்களின் தாயாருமாகிய ஸ்ரீமதி. ஆச்சிக்குட்டி சென்ற ஞாயிற்றுக்கிழமை தேகவியோகமாயினரென்னுந் துக்க செய்தியை அறியலானோம்.

கடித விஞ்ஞாபனம்.

கடிதமெழுதியுதவும் அபிமானிகள் தெளிவாக எழுதியனுப்புதல்வேண்டும். "நள்ளார் கொடுமை" என்னும் இக்கடிதம் தெளிவாக எழுதப்படாமையினாலும், இரண்டு பக்கங்களிலும் எழுதப்பட்டிருத்தலினாலும் பிரசுரிக்கப் படாதொழிந்தது. —பத்திரிகாசிரியர்.

கடிதம்.

இந்துசாதன பத்திரிகாசிரியரவர்களுக்கு:

ஐயா,

பதின்மூன்றுவது வயது பூர்த்தியாகுமுன் இறந்த சிறுமிக்கு திவசம் செய்யலாமோவென பசைத தாங்களாவது தங்கள் சாதனத்தை கிரமமாய் வாசிக்கும் அறிஞர்களிலெவராவது காலதாமசமின்றி இப்பத்திரிகைவாயிலாய் அறிவிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

K. C. K.

வித்தியாதரும உபகாரம்.

1924௵ தை௴ 21௳ பானுவாரம் இரவு 7 மணியளவில் நீர்கொழும்பு கடற்கரைத் தெரு சித்திவிநாயகப் பெருமான் ஆலயத்தில் ஸ்ரீ. ச. கதிரவேற்பிள்ளை அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் சைவப்பிரசாரகர் . த. குமாரசாமிப்பிள்ளை அவர்களால் "பூஜோபசாரத்துவார்த்தம்" என்னும் விஷயம் பிரசங்கஞ் செய்யப்பெற்றது. சபையில் கூடியிருந்த சைவாபிமானச் செல்வர்களனைவரும் பிரசங்க இனிமையைக்கேட்டு ஆனந்தபரவசமாயினர். பின் புகழ்கோஷத்தோடு அக்கிராசனாதிபதி அவர்கள் பிரசாரகருக்கு மாலை சூட்ட ஸ்ரீ சரவணபவன் அவர்கள் எழுந்து ஷை பிரசாரகர் அவர்கள் இளமைப் பருவத்தில் யாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலும் சென்று கற்றுவந்த கல்வியின் அருமையையும் தற்போது இலங்கை எவ்விடங்களிலும் பிரசங்கமழை பொழிந்து வருவதையும் கற்கசடறக்கற்பவைகற்றபின் நிற்கஅதற்குத்தக என்னும்வாக்கியத்தின்படி சமயவிருத்திக்காகத் தொண்டுசெய்வதில் தமது காலத்தைக்கழித்தல் வேண்டுமென்னும் எண்ணத்தோடு ஸ்ரீ ஞானபண்டிதவித்தியாசாலையை ஒன்றரை வருடத்திற்கு முன்னதாகவே ஸ்தாபித்து நடத்திவருவதைப்பற்றியும் சமயாபிமானிகளாய் உள்ள வர்களிடத்தில் அதற்கு வேண்டிய பொருளுதவிபெறவேண்டும் என்ற நோக்கத்தோடு இங்கும் வந்தாரென்றும், பிரசங்கம் செய்யும் திறமையாகவும், தெளிவாகவும் இனிமையாகவும் எடுத்துக்கூறினர். ஸ்ரீ இ. சந்திரசேகரம்பிள்ளை அவர்கள்சமய அபிமானத் தொண்டு செய்யும் அன்புடையவராய்வித்தியாசாலைப் பரிபாலனத்திற்காக இயன்ற பொருள் உதவிசெய்தற்கு எடுத்துக்கொண்ட நன்முயற்சியால்நீர் கொழும்பு தமிழ்வித்தியா விஷய சங்கீதசபையாராலும் மற்றும் உள்ள சைவ அபிமானிகளாலும் ரூபா நூற்றிருபத்தைந்து சேகரித்துஷைபிரசாரகர் அவர்களுக்கு உபகரிக்கப் பெற்றது.

இங்ஙனம்,
ஐயாத்துரைப்பிள்ளை.

நீர்வேலியில் மனிதரில்லையா?

நீர்வேலியானது அநேக பிரபுக்களையும், அறிவாளிகளையும், வித்துவான்களையும், சமயாபிமானிகளையும் கொண்ட ஒரு சிறந்த ஊராகும். பரசமய கண்டனஞ்செய்து சைவசமய ஸ்தாபனஞ்செய்த ஸ்ரீமத் சங்கரபண்டிதர் வாசம் செய்த இடம் இதுவாகும். இது "செத்துக்கிடக்குதுபார் சிவசங்கரபண்டிதன் றெம்முனைக்கே" என்றதனாலும் நன்கு புலப்படுகிறது. அன்றியும் இவ்வூரில் ஒரு சுப்பிரமணியராலயமும் இரு விநாயகராலயங்களும் பாரிய திருப்பணி யுடையனவாகவும் அவைகள் நித்திய நைமித்திகவிசேடமுடையனவாகவும், விளங்குகின்றன. இதனால்இவ்வூரவர்களுடையசமயாபிமானம் இத்துணைத்தென்பதுவெளியாகின்றது. இக்காலத்திலும்இந்தவூர் அநேகசமயாபிமானிகளையும், செல்வர்களையும் இலங்கையின் நாநாபாகங்களிலும், தொடுவாய் இராச்சியப்பகுதியிலும் உத்தியோகம்வகித்திருக்கும் பிரபுக்களையும் உடையதாக இருக்கிறது. இவ்வனப்புகளெல்லாம் ஒருங்கேயமையப்பெற்றஇவ்வூருக்கு நடுநாயகமாக விளங்குவது சமயாபிமானிகளுடைய பொருளுதவிகொண்டு காலஞ்சென்ற ஸ்ரீமத் சிவப்பிரகாசபண்டிதரவர்களாற் ரூபிக்கப்பட்ட சைவ வித்தியாசாலையாகும். இவ்வித்தியாசாலையானது இவ்வூரவர்கள் முன்செய் வல்வினையாலோ அன்றி முடிவில் நல்வினையாலோ நிர்ப்பந்தமான நிலையைஅடைந்துகொண்டு வருகிறது. அங்கு கல்விகற்ற சிறுவர்களில் அநேகர் வேறு வித்தியாசாலைகளுக்குப் போய்விட்டார்களென அறியலானேன். அவ்வித்தியாசாலைக் கட்டிடமும் சீர்கேடான நிலையிலிருக்கிறதெனவும், வித்தியாபகுதியார் இவ்வித்தியாசாலையின் நிலைமையைப்பற்றி மிகவுங் கண்டித்திருக்கிறார்களெனவும், அரசினராற் கொடுக்கப்படும் உதவிநன்கொடைப்பணமும் சென்ற வருடம் கொடுபடாது தடைப்பட்டிருக்கிறதெனவும் இவ்விதமான சீர்கேட்டுக்குக் காரணர் இப்பொழுதிருக்கும் மானேசரே யெனவும் அறியலானேன். இதைப்பற்றி ஊரிலிருந்தும் சில கடிதங்கள் இங்கு வந்து சேர்ந்தன. வித்தியாசாலைகளில்லாத காடுமேடுகளிலெல்லாம் சைவவித்தியாசாலைகளும் ஆங்கில வித்தியாசாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டுச் சிறப்படைய நீர்வேலியிலுள்ளார் இந்த ஒரு வித்தியா சாலையைத்தானும் நடத்த முடியாதவர்களாகவிருப்பது அவமானமல்லவா? இத்தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ள நமது நண்பர் பலர் என்னைச் சந்தித்து இந்த விஷயமாக மிகவும் மனஸ்தாபப்பட்டனர். உலக்கைதேய்ந்து உளிப்பிடியாதல் உலகவழக்கம் அவ்வுலக்கைதேய்ந்து ஒன்றுமில்லாமற்போன புதியமுறையை இன்று இவ்வூரவர்களிடத்திற் கண்டேன். உங்கள் ஊரிலுள்ள சமயாபிமானிகளெங்கே? அறிவாளிகளெங்கே? இவ்வித்தியாசாலையைச் சீர்ப்படுத்துவது பாரமென்று நினைக்கிறீர்களா? ஏன் தாமதிக்கிறீர்கள்? ஏன் மௌனஞ் சாதிக்கிறீர்கள்? அனுவசியமான விஷயங்களிற் பிரவேசித்து பொருளையிழந்து, காலத்தையும் வீணாக்கி, அவமானமுமடைவதிலும் பார்க்க இந்த வித்தியாதரும விஷயத்திற் பிரவேசியுங்கள்! இதனாற் சில கஷ்டமும் நஷ்டமும் நேர்ந்தாலும் உலகம் உங்களைப்போற்றும்!! ஏற்றிலும் கயிலை ஏற்றும்!!!

F. M. S
28-1-24

இங்ஙனம்,
உங்களூரவன்,

இந்திய சமாசாரம்.

ஓர் அமெரிக்கரின் அபிப்பிராயம்

உலகிலுள்ள எல்லா மதங்களையும் ஒற்றுமைப்படுத்தும் நோக்கத்துடன் உலக யாத்திரை செய்துவரும் டாக்டர் பான்விபி ஹால்ஸனும் அமெரிக்கர் இந்தமாசம் இங்கு வந்து சேர்ந்தார். அவர் உலக மதங்களின் ஒற்றுமையென்னும் விஷயத்தைப்பற்றி உபந்நியாசம் செய்தார் தமது பிரசங்கத்தினிடையே அவர் அடிக்கடி காந்தியடிகளின் பெருமையைப்பற்றிக் குறிப்பிட்டதோடு அவருடைய போதனைகளை ஆதரித்தும் பேசினர். காந்தியடிகளைப்பற்றி அவர் பேசியதாவது:—"ஸ்ரீமான் காந்தியைத் தற்காலத்திலுள்ள ஒரு தவமுதல்வர் என்று கூறலாம். உலகிலுள்ள எல்லாமதங்களின் உண்மையையும் அறிந்த அநுபவ ஞானியாக அவர் விளங்குகிறார்." தூங்கிக்கொண்டிருக்கும் ஒரு தேசத்தை அவர் தட்டி எழுப்புகிறார். இந்நாட்டில் மறைந்திருந்த ஒளியானது அவர்மூலமாக உலகெங்கும் வியாபித்து வருகிறது. நூற்றுக்கணக்கான வருஷங்களாகத் தூக்கத்திலாழ்ந்திருக்கும் இந்தியர்கள் தங்கள் தூக்கத்தைவிட்டு எழுந்து இந்தியாவை உலகிலுள்ள முன்னணி தேசங்களுடன் சமநிலைக்குக் கொண்டுவருதல் வேண்டும். இதுவே இந்தியர்களுக்குத் தற்பொழுதேற்பட்டிருக்கும் முக்கியமான கடமையாகும். மகாத்மா காந்திக்குப் பற்பல கவலைகளும் துயரங்களும் உண்டு. ஜனங்கள் என்ன செய்வார்களோ வென்பது அவருடைய கவலைகளில் முக்கியமானதொன்றாகும். தாம் என்ன செய்யவேண்டுமென்பது அவருக்கு நன்றாகத் தெரியும். ஆனால் முன்யோசனையில்லாதவர்கள் எல்லாவற்றையும் கெடுத்துவிடப் போகிறார்களோவென்று அவர் பெரிதும் அஞ்சுகிறார்.

மகாத்மாவின் விடுதலைக் கொண்டாட்டம்.

தென்னாபிரிக்காவில் சந்தோஷம்

மகாத்மா காந்தியின் விடுதலையைக் கொண்டாடும்பொருட்டு இன்று இந்தியர்களின் கடைகளெல்லாம் மூடப்பட்டன மாலையில் கூடிய பொதுக் கூட்டத்தில் அவர் விடுதலையடைந்ததைக் குறித்து ஆண்டவனுக்கு வந்தனமளிப்பதாகவும், நீண்டகாலம் தேசஊழியம் செய்யும் பொருட்டு அவருக்கு தீர்க்காயுளை அருளவேண்டுமென்று பிரார்த்திப்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சேர்மனியிலுள்ள இந்தியர்களின் வாழ்த்து

ஹாம்பர்க்கிலுள்ள இந்திய வியாபாரிகள் நேற்று கூடி மகாத்மா காந்தியின் விடுதலையைக்குறித்துத் தங்களுடைய மகிழ்ச்சியைவெளியிட்டார்களென்றும், தங்களுடைய வாழ்த்துகளை அனுப்புகிறார்களென்றும், அவர் சீக்கிரத்தில் பூரணசுகமடைந்து தாய்நாட்டிற் குழைத்து வெற்றி தேடிக் கொடுக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறார்களென்றும் அசோஸியேட்டெற் பிரஸுக்குத் தந்தியனுப்பியிருக்கிறார்கள்,

கீழாபிரிக்காவில் கொண்டாட்டம்

நேற்று இந்நகருக்கு மகாத்மாவின் விடுதலைச் செய்தி கிடைத்ததும் இந்தியர்கள் ஆனந்தக் கடலில் மூழ்கினார்கள். நகர் முழுவதும் கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டது. இரவில் தீபாலங்காரங்கள் செய்யப்பட்டன. ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்த பொதுக்கூட்டத்தில் மகாத்மாவுக்குத் தேக சுகத்தையும் தீர்க்காயுளையும் அளிக்குமாறு ஆண்டவனைப் பிரார்த்திப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வரிகொடா இயக்கத்தில் உறுதியாக இருக்கும்படி ஜனங்கள் கேட்டுக் கொள்ளப் பட்டனர். இரவில் இந்தியர், ஆபிரிக்கா சுதேசிகள், அரேபியர்கள் முதலியவர்கள் 5000 பேரடங்கிய பெரிய ஊர்வலம் மகாத்மாவின் உருவப்படத்துடன் தெருக்களைச் சுற்றிவந்தது.

ராம்சே மாக்டனால்டின் வாக்கு.

சில தினங்களுக்குமுன் இங்கிலாந்தின் பிரதம மந்திரியான ராம்சே மாக்டனால்டு சுமார் பதினைந்து வருஷங்களுக்குமுன் இந்தியாவுக்கு வந்துபோனவர். 1909-ம் வருஷத்தில் அவர் "இந்தியாவின் விழிப்பு" என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அது இந்தியாவுக்குள் வரக்கூடாதென்று இந்திய அரசாங்கத்தாரால் தடுக்கப்பட்டிருந்தது. அதில் இந்தியாவைப்பற்றியும் இந்தியர்களைப்பற்றியும் பல நல்லவிஷயங்கள் கூறியிருக்கிறார். அக்கால இந்திய அரசாங்கத்தைக் கண்டித்திருக்கிறார். ஆனால் இப்பொழுது எப்படியிருக்கிறாரோ?

அவர் கூறியதாவது:—

"இந்தியாவின் புராதனப் பெருமையானது என்றும் நிலைத்திருக்குமென்றும், நமது ஆதிக்கமானது நீர்மேல் குமிழிபோன்று சீக்கிரம் அழிந்து போய்விடுமென்றும் எனக்குத் தோற்றுகிறது.

"நம்முடைய நல்லரசாங்கத்தை ஓர் இராசாங்கப் புரட்சி இருக்கஇடந்தெரியாமல் போய்விடும்படி செய்துவிடக்கூடும். சூரிய வெப்பமானது புல்லைத் தகித்துக் கருகிப்போம்படி செய்வதுபோலப் பொருளாதார விஷயங்களில் நாம் அடைந்துள்ள வெற்றியெல்லாம் இந்தியாவில் ஆத்மார்த்திக உணர்ச்சி மீண்டும் ஏற்பட்டால் இருந்த இடந் தெரியாது போய்விடும்.

"நாம் இந்தியாவுக்குப் போதித்துக்காட்டிய வழிகளெல்லாம் மாயமானைப் பின்தொடர்ந்து செல்வதுபோன்று செல்லுமாறு செய்கின்றனவேயன்றித் தத்துவத்தைப் பின்பற்றி நடக்கும்படி செய்கின்றனவா? நாம் இந்தியர்கள் தேடவேண்டிய செல்வமென்று கூறுவது மண்ணையன்றி வேறென்ன? இந்தியாவில் கைத்தொழில்கள் தோன்றிவருகின்றதை நான் பார்த்தேன். அவை காசியிலுள்ள ஸ்நானகட்டங்களின் காட்சியையும், பாங்கிபூரிலுள்ள வாசகசாலையின் நூல்களைப் படிப்பதால் உண்டான உணர்ச்சியையும் போக்கிவிடுமா?"

இந்தியாவின் பெரிய வறுமையைப்பற்றி ராம்சே மாக்டனால்டு தமது நூலில் பரிதபித்திருக்கிறார். இந்திய அரசாங்கத்தின் வீண் செலவை அவர் பலமாகக் கண்டித்திருக்கிறார் அடக்குமுறைச் சட்டங்களை ஆட்சேபித்திருக்கிறார். இந்தியாவில் ஏற்பட்டிருந்த ராஜீயப் புரட்சி இயக்கத்தைப்பற்றிப் பேசும்பொழுது, 'இந்தியாவிற் தற்காலம் ராஜீயப்புரட்சி இயக்கம் தலைகாட்டி வருகிறது. அதற்குப் பொறுப்பாளி எவரேனும் உளரென்றால் அவர் லார்ட் கர்சனேயாவர்" என்று அக்காலத்து ராஜப்பிரதிநிதியைக் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்திய தேசிய இயக்கத்தைப்பற்றி அவர் குறிப்பிடும்பொழுது "தேசிய இயக்கமானது சிறிது முன்னேற்றமடையவேண்டுமானால், அதிகாரவர்க்கத்தினருடன் போராடியே முன்னேற்றமடையவேண்டும்' என்று கூறுகிறார்.

ராம்சே மாக்டனால்டு பெரிய அறிஞராயிருக்கவேண்டும். மேற்கண்ட அவரது வாக்குகள் தீர்க்கதரிசனம்போல நமக்குத் தோன்றுகின்றன. ஆனால் அப்பொழுது அதிகாரம் இல்லை. ஞானக்கண்பெற்ற தீர்க்கதரிசிபோல எழுதியிருக்கிறார். இப்பொழு ஞானக்கண்கூடக் கெட்டுப்போயிருக்கலாம். —லோகோபகாரி.

கடவுளைநம்பினோர் கைவிடப்படமாட்டார்.

இவ்வுலக ஜீவராசிகளுள் பெருங்குறைகளுக் குட்படவேண்டியது மானிடவர்க்கமே. எவ்வளவோ கஷ்டங்களும் துன்பங்களும் நாம் அனுபவிப்பது எல்லாரு மறிந்தே யிருப்பர். ஆனால் இவ்வித சங்கடங்களில்லாது பண்ணுவதற்கு யாவரேனும் உளரோவென ஆராயின் உளரென்றே நாம் தீர்மானிக்கவேண்டும். அவ்வண்ணமாகவே ஒருவர் இருந்தும் ஏன் நாம் இப்படித் துன்பங்கள் அடையவேண்டும்; அவரிருப்பதைநாம் அறியலாமா? அல்லது அவரை அறிவதற்கு அலட்சியம் செய்தோ? இன்னும் அவரை நம்புவதினால் என்ன பிரயோசனமென்ற விபரீத எண்ணங் கொண்டா? என்றும் இவைகளைப்பற்றி அநேகர் வருந்துகின்றனர்.

"தனக்குவமையில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால், மனக்கவலை மாற்றலரிது." என்பது பொய்யாமொழியன்றோ? அவரே நம்துன்பங்களை நீக்கத்தக்கவர். எவ்வித உதவியை நாம் நாடுகின்றேமோ அதைஅளிக்கவல்லவர். அசாத்தியமான காரியங்களைச் சாத்தியமாக வரஉதவி செய்பவர். உலகிலே நாம் ஜீவித்திருப்பதும் அவராலே, நன்குவாழ்வதும் அவராலே, இறத்தலும் அவரது கிருபாகடாட்சத்தினாலே இத்தகைய வல்லமையுடையவர் யாரென்று தெரியாதவருமுளரோ? அவர்தான் கடவுள். அவரது பாதமே துணையென நம்புவோர்க்கு துக்கமே கிடையாது. எக்காலத்திலும் எவ்வித சுகதுக்கங்களிலும் கடவுளை நம்பினாலேயல்லாது பிறிதால் ஒரு சுகமுமில்லை.

"வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க் கியாண்டு மிடும்பையில."

நாம் செய்வதெல்லாம் ஒன்றே செய்யமுடியாததுமல்ல. கஷ்டமில்லாது சுகமாய் முடியக் கூடியதே. இதெல்லாம் அவரிலே நம்பிக்கையுடன் முடியவேண்டும். அவரை நம்புவோமாகில் எவ்வித காரியங்களிலும் கைவிடமாட்டாரென்பது திண்ணம் எவ்வித அபாயத்திற்கும் பயப்படவேண்டியதில்லை. இதற்கு அத்தாட்சியாக மார்க்கண்டேயருடைய சரித்திரத்தைக் கவனிக்கலாம். மார்க்கண்டேயர் கடவுளே பெரியவர், அவரை நம்புவோர்க்கு ஒருவித குறைவு மில்லையென நம்பிக்கையுண்டானபடியினாலல்லவோ, அவர் யமதூதர்களின்றும் விலகி என்றும் பதினாறுவயதுடையவராய் விளங்கி அவருடைய அருளைப்பெற்றார். இன்னும் இதற்கு உவமையாக பல சரித்திரங்களுள. விரிக்கிற் பெருகுமென விடுத்தாம். எவ்விஷயத்தை நினைத்தாலும் எக்காரியத்தைசெய்யத்தொடங்கினாலும் நன்மையான விஷயமாயிருந்தாலுஞ்சரி அது தீமையாயிருந்தாலுஞ்சரி நாம் செய்யத்தொடங்கும்பொழுது அவரை மனதில் உறுதியாக நினைத்தால் அதேமிக உத்தமமாகும். நமது முன்னோர்கள் ஈசுரத்தியானம் வரும்பொருட்டு தம் சந்ததியார்கட்கு எவ்வளவோ முறைகளை விதித்திருந்தனர். கடவுளுடைய நாமங்களையே பிள்ளைகட்கு இட்டுவந்தனர் உதாரணமாக "நடராஜா" என்ற பெயரைக் கவனித்தால் சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜப்பெருமானது திவ்ய ரூபாச் சின்னங்கள்

நமக்கு வந்துவிடுகின்றன. அதாவது அவரது கிரகிலே சக்கையிருப்பதும், அவரது ஒருகரத்தில்மானும் மற்றொருகரத்தில் அக்கினியும் இன்னும் மற்றும் அவயவங்களும் ஒவ்வொன்றைக் குறிப்பிட நமக்கு ஓர்வித ஐஸ்வரத்தியானம் இயல்பாகவேவந்துவிடுகின்றது. இவைகளெல்லாம் நமது முன்னோர்கள் அனுசரித்து வந்த முறைகள் இவ்வித திருஷ்டாந்தங்கள் இன்னும் அநேகமுள. ஆனால் தற்காலத்தில் நவீன நாகரிகத்தின் வலையிலே சிக்குண்டவர்கள் அன்பர்கள் முன்னோர்களுடைய விதியை விடுத்து தம்குழந்தைகளுக்கு அநாகரீகமான நாமங்களை (பெயர்முடிவில் இரத்தினங்களென்றும் பவளங்களென்றும், வைரக் கற்களென்றும், அமிர்தங்களென்றும், அதிசயம் ஆச்சரியம் என்றும்) இடுகின்றனர். சிலர் இட்டபெயர்களைக் குறுக்கி சுருக்கிலே வருவதையே வழங்குகின்றனர். அதாவது க. பாலசுப்பிரமணியம், என்பதை க-பா-சு மணியம் என்றும் (ஆங்கிலத்தில் கே. பி. சுப்பிரமணியம் வி. சிதம்பரம் பிள்ளை யென்பதை வி- சி பிள்ளையென்றும் ஆங்கிலத்தில் வி. எஸ். பிள்ளை க. இராஜரத்தினம் என்பதை க. இ. இரத்தினம் என்றும் இப்படியாக இப்பெயர்களைக் குறுக்குவதினுல் ஏதோ நாகரீகமும் கௌரவமும் என்று எண்ணும் நண்பர்களை என்னென்றுதாம் சொல்லலாம். இப்பெயர்களைக் குறுக்குவதினுல் அப்பெயர்களின் கருத்து வித்தியாசப்பட்டு யாதேனும் ஒரு சுகமில்லாமற் போகின்றது. உதாரணமாக மேலே காட்டியவற்றில் "பால சுப்பிரமணியம்" என்னும் பெயரைக் கவனிப்போம். இப்பெயரின் கருத்து சூரபன்மனுகிய அசுரனைக் கொன்ற பாலராகிய சுப்பிரமணியக் கடவுளென்பதே. இதைத்தற்காலத்தில் நவீன நாகரீகத்தை யடைந்தபுதல்வர்கள் தத்தம் மனம்போனபடி மாற்றியும் குறுக்கியும் சத்தரித்தும் விடுகின்றனர். இதுதானு நாம் கற்றுக் கொண்ட கல்வியின் பலன்? இதுதானு நாகரீகம்? இதைச் சற்றே அன்பர்கள் யோசிப்பாராக.

மேலும் சிலர் செய்யத்தகாதவற்றைச் செய்யத் தொடங்கி அதில் தோல்வி யடைந்தால் "எல்லாம் அவன் செயலே நம்மால் என்ன ஆகும்' என்று கடவுளையே நம்பியிருக்கின்றவர் போலச் சொல்லி விடுகின்றனர். ஆனும் அவர்களே சிற்சில சமயங்களில் நன்மையடைந்தபின் இப்படியானவிஷயத்தில் நாமில்லாவிடில் இது அநுகூலமாய் வந்திருக்குமோவென தங்களை மேன்மைப்படுத்திப் பேசிவிடுகின்றனர். தமக்குப் பாத்தியப்படவேண்டிய கடவுள் தன்மைக்குப் பாத்தியமாகாரோ? இதுதானு கடவுள் நம்பிக்கை? ஆ! என்ன அறியாமை! எல்லாவற்றிற்கும் தெய்வசகாயம் வேண்டாமோ என்று சொல்வதை நாம் பலதடவைகளில் கேட்டிருக்கிறேம். மனிதர்களுடைய முயற்சியிருந்த பொழுதிலும் தெய்வசகாயம் வேண்டுமென்பதே அதனது பொருளாகும். "அவனன்றி யோரணுவு மசையாது" என்பதை நாம் மறக்கக்கூடாது. யாம் ஒரு காரியத்தை மெய் வருந்தச் செய்து கொண்டு வருகையில் நம்மை அணுகியும் அதைச்சரிவர அநுகூலமாக்குவது தெய்வசகாயத்தாலன்றோ? அப்படியாயிருப்பதினுல் கடவுளை நம்பினோர்க்கு ஓர்வித சங்கடமும் நேரமாட்டாது. கடைசியாக நாம் இவ்வுலகை விட்டு நீங்கும்போது நமக்குக் கூடவந்து துணைசெய்பவர் நமது நண்பர்களா? நமது தாய் தந்தையர்களா? நமதுசகோதரர்களா? நாம்தேடிவைத்தபண மூட்டையா? நமது அயல் வீட்டார்களா? இன்னும் மற்றவர்களுமா? முழுமுதற் பொருளாகிய கடவுளொருவரேயொழிய பிறிதொன்றல்ல. ஆகையால் அவரை நம்பினுற்றுன் நாம் பயனடைவோம். அப்படி நம்புவோமாயின் நாம் கைவிடப்படமாட்டோம். ஆனதுபற்றி நாம் ஒவ்வொருவரும் கடவுள் நம்பிக்கைகொண்டு கடைத்தேறும் பொருட்டு முயல வேண்டும். "கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார்."

"திராவிடன்"

அடைவுநகைவிற்பனவுவிளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்க கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் திரிகோணமலை நகைக்கடைவீதி வே. த. வெற்றிவேற்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை & தம்பிப்பிள்ளை எனபவர்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்:—

1922ஆ

இல.	மா.	தி.	ரூ.	ச.	நகைவிபரம்.
2384	சித்.	6	7		வெ தக இல்.சிற திருகு பூ 1
2450	,,	12	8	4	ஒட்டு வளையல் 4
2544	,,	22	6		பொன்குச்சி சோடி 1 மின்னி 2
2564	,,	25	6	4	கொப்புச்சிமிக்கி சோ.1
2580	,,	27	10	4	வளையல் 6
2595	,,	29	20		பழுதான பதக்கமுடன் சவுக்கமணிக்கோ 1ல் மணி 20 பி. பழு.
2597	,,	29	23		பஞ்சாயுதமணி. கோ1ல் மணி 30
2598	,,	29	15		குவளைமுத்துக் கடுக்கன் சோடி 1
2622	வை.	2	51	50	ஆறுபட்டுமணி 1 பின் பாதியில்லை வெ. தாவடைசோடி 1
2634	,,	3	25		பதக்கமுடன் சரடு 1
2710	,,	14	95		ஐந்துபட்டிலை மாலை 1
2711	,,	14	6		தொல்கட்டாமுருகு 1 பொன்முருகுசோடி 1
2758	,,	20	7		சி தோடுசோ 1 தாலி 1
2825	,,	25	7		பழுதானதோடுசோடி 1
2840	,,	27	20	4	வெ. பாதசரம்சோடி 1
2881	ஆனி	1	6	50	கொப்புச்சிமிக்கிசோ.1
2901	,,	3	32		கொப்புச்சிமிக்கிசோ.1 அர.காதப்பூ சோடி 1 மயில்முக்குத்தி 1வெ. கு.கா சோ.1வளை.1
2948	,,	9	30		மணிக்கோ. 1 மணி 36 பழுது
2991	,,	12	37		ஐந்துபட்டுமணி 1
3013	,,	14	10	4	குவளை சோடி 1
3036	,,	17	10		பின்னல் மோதிரம் 1
3057	,,	20	35		தாலிக்கொடி 1
3059	,,	20	6		கொப்புச்சிமிக்கிசோ 1
3065	,,	21	6		கொப்புச்சிமிக்கிசோ.1
3102	,,	25	10		சிவப்புக்கடுக்கன்சோ.1
3228	ஆடி	11	6		வெ. அரைஞாண் 1
3261	,,	15	7	4	சிறு கொலுசு சோடி 1
3271	,,	16	6		பின்கோர்க்கு 1
3281	,,	18	25		வெ பாதசரம்சோடி 1
3313	,,	22	5	50	படக்கூர் 2
3317	,,	22	20		ஐந்துபட்டு வெள்மட்ட மணிக்கோர்வை 1
3319	,,	23	8	4	வெ. கறணைசோடி 1
3329	,,	24	6		வெ. அரைஞாண் 1
3339	,,	25	6	4	குப்பிக்கடுக்கன்சோடி1
17	ஆவ.	3	18		வெ. பாதசரம் சோடி1
					ச. இ.
60	,,	9	25		வெ. பாதசரம் சோடி 1
76	,,	11	9		தோடு சோடி 1
99	,,	14	20		இ. சாதோலைசோடி 1
					க. I வி.
105	,,	14	15		சிவப்புக்கடுக்கன்சோ.1
					ச. இ.
108	,,	14	13		குவளைக்கடுக்கன் சோ.1
117	,,	15	7	50	தட்டைக்குச்சு சோடி1 வெ. கறணைசோடி1
122	,,	16	6		சிறுகுவ கடுக்கன்சோ1
161	,,	19	70		சிறுசிங்கமுகக்காப்பு சோடி 1
182	,,	21	6	50	வளையல் 6
229	,,	25	30		இரண்டுபட்டு நெல்லி மணிகோ 1 மணி 77
					பி. இ.
241	,,	26	25		பொன்காப்பு சோடி 1
282	,,	19	17		வெ. பழையபாதசரம் சோடி 1
300	,,	31	9		மு இ. கொப்புச்சிமிக்கி சோடி 1
319	புரட்.	2	10		வெ கொலுசு சோடி 1
321	,,	2	9		பொன்கொப்புச்சிமிக்கி சோடு 1 வளையல் 2
329	,,	2	28		இதட்திருகுபூ 1, கற் கோசுவாளிசோடி 1, க.செரு.தோ.சோ.1
370	,,	8	30		பூசாந்திரம் பின்கோர்க்கியுடன் மணி 9
383	,,	10	15		பதக்கம் 1, பொட்டு 1 உடன் சவக்கமணிக் கோ. 1 மணி 20
401	,,	11	22		சரட்டட்டியல் 1
438	,,	16	18		மேலீடு சோடி 1, வெ. கறணை சோடி 1
476	,,	20	6		பதக்கம் 1
481	,,	21	7		மேலீடுசோ.1, தோடு1
486	,,	21	12		தோடு சோடி 1 நசியல்
527	,,	26	38	28	தாலிக்கொடி 1
528	,,	26	9		தங்கக்காப்பு 1
552	,,	29	7		மெழுகுக் குவளைக்கடுக்கன் சோடி 1
560	,,	29	6	4	மேலீடு சோடி 1
596	ஐப்.	2	9		அட்சரக்கூடு 1
616	,,	4	6	50	வெ. கறணைசோடி 1
624	,,	5	50	4	பட்டக்காப்பு சோடி 1
626	,,	5	24	50	வெ. பாதசரம் சோடி 1
635	,,	6	15		வெ. கொலுசு சோடி 1
638	,,	6	6	50	கொப்புச்சிமிக்கிசோ.1
639	,,	6	6		சிறுசெரு தோடுசோ. 1
644	,,	6	16		இ. சிவப்புக் கடுக்கன் சோடி 1
658	,,	7	11		சவுக்கமணிக்கோ. 1ல் மணி 10
674	,,	9	18		பத சவுக்கமணிக்கோ 1 மணி 12
689	,,	10	11		சிறுதங்கக்காப்புசோ.1
729	,,	14	16		சிவப்புக்கடுக்கன்சோ.1 சிறுவளை பல்2 பட.கூர்1
757	,,	17	5	50	செருகுதோடுசோடி 1
					க. ச. இ.
774	,,	18	30	4	தாலிக்கொடி 1
873	,,	26	10		சவுக்கமணிக் கோ 1 ல் மணி 14
878	,,	27	6		பதக்கம் 1
881	,,	28	14		தோடு சோடி 1
886	,,	28	13		வளையல் 8
929	கார்.	1	80	4	பட்டக்காப்பு சோடி 1 பழு.
1035	,,	11	11		கொப்புச்சிமிக்கிசோ.1 படக்கூர் 1
1047	,,	12	9		பழையமணியட்டியல் 1
1050	,,	13	6	4	கொப்புச்சிமிக்கிசோ. 1
1053	,,	13	20		வெ. பாதசரம்சோடி 1
1056	,,	13	20	4	வெ. கொலுசு சோடி 1
1079	,,	15	202	28	சிங்கமுகக்காப்புசோடி1
1117	,,	18	11		பவுணை 1, பொன்கொப்புச்சிமிக்கிசோடி 1
1154	,,	21	8		தோடு சோடி 1 நசி,
1158	,,	22	19		வெ. பாதசரம் சோடி 1
1153	,,	22	9		திருக்கொன்றைமணி 10 பின் 1
1211	,	28	48		பூரானட்டியல் 1

விற்பனவு:-ருத்ரோத்காரிஞு மாசிமீ 17உ க்கு சரியான 1924ஆ மாசிமீ 9உ வெள்ளிக் கிழமை காலை 8 மணி தொடக்கம் டை கடைத் திண்ணையில் எடுபட்ட நகை பிறத்தலாக பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வெண்டின்மேஸ்தர்,
வி. பொ. விசுவநாத உடையார்.
(Mis. 436.)

அஷ்டபந்தன மருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட சுவாமிக்குச் சாத்தும் அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ச. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
(H. 21) வண்ணார்பண்ணை.

திறமானமங்களூர்ஓடுகள்

மெஸ்சேர்ஸ் மோர்கன் அன்கோ அல்வாரிஸ் அன்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், காற்ரேடுகள், பீலியோடுகள், கண்ணுடியோடுகள், சித்திர சகிதமானஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம்போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஒட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
(H. 23). யாழ்ப்பாணம்.

"ஸ்ராண்டேர்ட்" கொழுக்கியோடுகள்.
(Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ராண்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றோம்:—

முதலாவது, இந்தஓடுகள்மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வட இலங்கையின் தேச சுவாத்தியத்திற்கு இசைந்தஓடுகள்இவைகளேயாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றுவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றோம். இந்த மூன்றுவருட காலத்துள் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென்பதற்கு இந்த ஒருநியாயமுமே போதிய சான்றாகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்லுவெட்டித்துறையிலும், பருத்தித்துறையிலும் எங்களிடம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை.

தந்திவிலாசம்,
"Ruby" வல்லுவெட்டித்துறை.
(H. 25.)

முந்துங்கள்! முந்துங்கள்!!

குறைந்த விலை விற்பனை.

கோல்டு மெடல் பட்டு புடவை.

இந்த புடவையின் உடல் சாதா, கரைகளுக்கு உயர்ந்த ஜரிகையினுல் டேப்பு கரையும், முந்தலைக்கு ஜரிகை பல்லாவுமுள்ளது. நாகரீகத்தை விரும்பும் தற்காலத்திற்கு ஏற்றபடி தயாரிக்கப்பட்டது. கலர்கள்:—வெள்ளை, ரோஸ், வெங்காயவர்ணம், கத்தரிப்பூவர்ணம், மேகவர்ணம் முதலியவை.

12 முழம்×44 இஞ்சு புடவை 1-க்கு ரூபா 30, 35
16 மு. ×44 ,, ,, ,, ரூபா 38, 50
18 மு. ×44 ,, ,, ,, ரூபா 50, 75

கே. எஸ். முத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.
(Y. 29)

ரைப்றைற்றர் விளம்பரம்.

பத்தாம் நம்பர் றிமிங்றன் ரைப்றைற்றரொன்றும் மொனுக் ரைப்றைற்ற ரொன்றும் ஜேனிபோ ஒன்றும் ஒரு அவுன்ச முதல் இருநூற்றி நாற்பது ருத்தல் வரைக்கும் நிறுக்கக் கூடிய தராசொன்றும் என்னிடம் விற்பனைக்கிருக்கின்றது. தேவையானோர்கள் நேரில்வந்துபார்த்துப் பெற்றுக்கொள்ளலாம்.

க. பொன்னம்பலம்,
சேணியதெரு,
(Mis. 433). யாழ்ப்பாணம்.

"சுதேசி".

தேசிய வாரமிருமுறைப்பத்திரிகை. பத்திராதிபர், பி. கோதண்டராமன் எம். ஏ. பி எல். தற்கால அரசியலைப்பற்றியும், சமுதாய விஷயங்களைப்பற்றியும், சுருக்கமாயும், விளக்கமாயும் உலகத்தில் நடைபெறும் விஷயங்களைப்பற்றியும் அறியவேண்டியவர்கள் இப்பத்திரிகையைப் படிக்கவேண்டும்.

சந்தாவிபரம்.
வருட சந்தா ரூபா 7.
6 மாதச் சந்தா ரூ 3 அ 12
3 மாதச் சந்தா ரூ 2
1 மாத சந்தா ரூ. அ 11

14, வாணிசா தெருவு,
சென்னை.

"லோகோபகாரி".

30-வருஷகாலமாக இது தமிழுலகமெங்கும் உலவி வருகிறது. இதில் வேதாந்த விஷயங்களும் எளிய தமிழில் எழுதப்படும் சமாசாரங்களும் இனிய படலங்களும் சித்திரபடங்களும் வெளிவரும். உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பற்றி இப்பத்திரிகை எவருக்கும் அச்சமின்றி, உண்மைமார்க்கத்தைப்பிடித்து நடுநிலையான அபிப்பிராயங்களை வெளியிட்டுவரும். நாட்டிலே புத்துயிர் ஏற்பட்டு இந்தியர் சுயராஜ்ய பதவி யடைந்து ஞாலமெல்லாம் இன்பம் அடைய வேண்டு மென்பதே "லோகோபகாரி" யின் முக்கிய நோக்கம் ஸ்ரீமாந். பரலி. சு. நெல்லையப்பபிள்ளை அவர்கள் இதன் ஆசிரியராகவும் அதிபராகவும் இருக்கின்றார். தமிழறிந்த ஒவ்வொருவரும் இதனை ஆதரிக்கவேண்டும். வருஷசந்தா ரூபா நான்கே, வெளிநாட்டிற்கு ரூபா 6. மாதிரிப்பிரதி இனும்

காரியஸ்தர், "லோகோபகாரி"
கோமளேஸ்வரன் பேட்டை, சென்னை.

"பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டளவிலேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் விருத்தர் ஈறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்றுகூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை. வருடச்சந்தா ரூபாய் ஒன்று.

விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி.

உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

புஷ்டிக்கு கைகண்ட

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோனபலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை

150 பில்ஸ் ரூ. 10. 50 பில்ஸ் ரூ 4-0-0
20 பில்ஸ் ரூ 2. வி. பி. சார்ஜ் வேறு.

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரூ. 2

பிளேக் மாத்திரை.

காமிகட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷமே வராது. புட்டிக்கு ரூ. 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரூ. 1.

T. R. கருப்பண பிள்ளை,
(Q. 41 வைத்.) நிபாசாலை, பழனி. S. I

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors of the Saiva Prakasa Press, Jaffna.